हर हर शङ्कर ॐ जय जय शङ्कर

     

श्री-वेदव्यासाय नमः

## श्रीमद्-आद्य-शङ्कर-भगवत्पाद-परम्परागत-मूलाम्नाय-सर्वज्ञ-पीठम्
## श्री-काञ्ची-कामकोटि-पीठम्
## जगद्गुरु-श्री-शङ्कराचार्य-स्वामि-श्रीमठ-संस्थानम्

# सूर्य-अर्घ्य-प्रदानम्

## பெண்கள் ஸூர்யனுக்கு அர்க்யம் கொடுக்கும் முறை

ஸ்நானம் செய்து சுத்தமான வஸ்த்ரம் திலகம் முதலியவற்றைத் தரித்து, தீர்த்த பாத்ரத்தில் சுத்தமான ஜலத்தை எடுத்துக் கொண்டு பக்தியுடன் **தினமும் மும்முறை** அனுஷ்டிக்க வேண்டும்.

காலை **கிழக்கு** நோக்கியும் மாலை **மேற்கு** நோக்கியும் செய்ய வேண்டும். மதியத்துக்கு உச்சிக்காலம் வரை கிழக்கு நோக்கியும், தாண்டிவிட்டால் மேற்கு நோக்கியும் செய்ய வேண்டும்.

முதல் ச்லோகத்தினால் ப்ரார்த்தனை செய்யவும். இரண்டாவது ச்லோகத்தை மூன்று முறை சொல்லி ஒவ்வொரு முறைக்கும் அர்க்யம் விடவும்.

**அர்க்யம்** என்பது இரு கைகளையும் சேர்த்து குவித்து உள்ளங்களை மேல்நோக்கி வைத்துக்கொண்டு அதில் ஜலம் எடுத்து பக்தியுடன் விடுவது.

### செய்யத் தகுந்தவை மற்றும் கூடாதவை

நதி முதலிய நீர்நிலையிலோ சுத்தமான நிலத்திலோ அர்க்யம் விட வேண்டும். சௌகரியப்படாவிடில் தாம்பாளம் போன்ற பாத்திரத்தில் விட்டு பிறகு வேறு சுத்தமான இடத்தில் சேர்க்கலாம்.


वेद-धर्म-शास्त्र-परिपालन-सभा

9884655618 8072613857 vdspsabha@gmail.com vdspsabha.org

அர்க்யமாக விடப்பட்ட நீர் பிறகு அழுக்கு நீருடன் சேரக்கூடாது, காலில் படக்கூடாது. கால் படும் இடத்தில் தெறித்தால் துடைத்துவிடவும்.

இதற்கு மட்டுமின்றி எந்த அனுஷ்டானத்திற்கும் பயன்படுத்தும் பாத்திரங்கள் தாமிரம், பித்தளை போன்ற ஸம்ப்ரதாயமான உலோகங்களில் இருக்க வேண்டும். எவர்சில்வர் போன்றவை அல்ல.

தீட்டுகள் ஏற்பட்டால் ஸூர்யனுக்கு மனதால் ப்ரார்த்திக்கலாம் ஆனால் செய்வதை தீட்டு விலகி சுத்தியான பிறகே செய்ய வேண்டும்.

### ஶ்லோகங்களின் பொருள்

**ப்ரார்த்தனை:** ஹே ஸூர்யனே வாரும்! நீர் ஆயிரம் கதிர்கள் கொண்ட ஒளிப்பிழம்பானவர்! நீர் உலகின் அதிபதியானவர்! பகலவனே! எனது பக்திக்கு கருணை காட்டி எனது அர்க்யத்தை ஏற்பீர்!

**அர்க்யம்:** அநேக கிரணங்கள் கொண்டு ப்ரகாசிக்கும் பரம்பொருளே! உமது தேஜஸ் எவ்விடமும் வியாபிக்கிறது. நீர் உலகை ஸ்ருஷ்டித்தவர், தூய்மையானவர், உலக நடப்புகளுக்கு ஸாக்ஷியானவர், உலகோரின் வினைப்பயன்களை அளிப்பவர். அத்தகைய உமக்கு வந்தனம்!

## ॥ प्रार्थना ॥

एहि सूर्य सहस्रांशो तेजोराशे जगत्पते।
अनुकम्पय मां भक्त्या गृहाणार्घ्यं दिवाकर॥

## ॥ अर्घ्य-प्रदानम् ॥

नमो विवस्वते ब्रह्मन् भास्वते विष्णुतेजसे।
जगत्सवित्रे शुचये सवित्रे फलदायिने॥
(एवं त्रिः)


9884655618 8072613857 vdspsabha@gmail.com vdspsabha.org